தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2024

**11 வயதுப்பிரிவு**

(01.01.2013 – 31.12.2013 வரையில் பிறந்தோர்)

## பிரிகேடியர் சொர்ணம்

கண் இமைகளுக்குள் தலைவர் மாமாவைக் காவல் செய்த வீரப் பெருந் தளபதியின் வீரம் உரைக்க வந்துள்ளேன்.

மூத்த பெருந் தளபதி சொர்ணம் மாமா!

தற்காப்புக் கலையில் தலை சிறந்தவர். கல்வியிலும் சிறப்பானவர். துரோகங்களை எதிர்த்துப் போராடத் தலைவர் மாமா நம்பிக்கையாக அனுப்பும் உற்ற தம்பி. போர்க்களங்களில் இவரது உறுமல் கேட்டாலே பதறிப் பயந்து அந்நியப்படை கதிகலங்கி ஓடும்.

பல வெற்றிச் சமர்களின் நாயகன் மூத்த தளபதி சொர்ணம் அவர்கள். களங்கள் பல கண்டு, வடுக்களைத் தாங்கிக்கொண்ட போதும், நிமிர்ந்த தோள்களும், வீறு கொண்ட நடையுமாய் புலியின் மிடுக்கோடு தமிழீழப்பரப்பெங்கும் வலம்வந்தவர். ‘வென்றால் வரலாறு இல்லையேல் நிகழ்வு’ என்று புன்முறுவல் பூக்கச் சொல்லிச் செல்வார். கடற்படை, வான்படை, தரைப்படை என முப்படைகளிலும் பணி செய்த தளபதி என்பது அவரது பேராளுமையின் அடையாளம்.

2009 இறுதிப்போர் நாள்களில் இரு கால்களும் உடைந்தபோதும் கட்டளைகளும் திட்டங்களுமாய் தன் இறுதி மூச்சுவரை களப்பணியாற்றினார். கொண்ட கொள்கைக்காகத் தமிழீழக் கனவைச் சுமந்து கொண்டு 2009 ஆம் ஆண்டு மே 15 ஆம் நாள் தாய்மண்ணுக்காகத் தன்னைக் கொடையாக்கினார் பிரிகேடியர் சொர்ணம் மாமா. தன் மூத்த மகளையும் தமிழீழத்திற்காக விதையாக்கிய வீரத் தந்தை இவர்!

நாம் கண்ட மாபெரும் வீரனாய் எங்கள் உள்ளங்களில் என்றும் நீங்கள் வாழ்வீர்கள். உங்கள் நினைவுடன் உங்கள் கனவைத்தாங்கி எம் பணி தொடர்வோம்!

“தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்”